தமிழக அரசு வழங்குவது 450 ரூபாய், வித்தியாசம் 34 ரூபாய், மூரியேட் ஆப் பொடாஷ் மத்திய அரசு வழங்குவது 473 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 445 ரூபாய், வித்தியாசம் 28 ரூபாய். என்.பி.கே. காம்ப்ளக்ஸ் மத்திய அரசு வழங்குவது 755 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 700 ரூபாய், வித்தியாசம் 55 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 1,047 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 970 ரூபாய், வித்தியாசம் 77 ரூபாய். மற்றொரு வகை மத்திய அரசு வழங்குவது 832 ரூபாய், தமிழக அரசு வழங்குவது 760 ரூபாய், வித்தியாசம் 72 ரூபாய்.

DR. H. V. HANDE : Over a period of years the Central Government was subsidising according to the Hon. Minister's reply these fertilisers and even the procurement price that we give to the farmers was also based on this. Now the procurement price is the same as before. But the Central Government, I understand, are still continuing the subsidy to certain other States, but they had withdrawn the same particularly for this State, I do not know for what reasons. May I know from the Hon. Minister on what basis, what were the reasons, why they withdrew the subsidy since 1969? When they were giving the subsidy all these years, what was the basis on which they removed the subsidy, and has this matter been brought to the attention of the Ministry concerned that we have not yet reduced the procurement price? In view of the fact that the State Government are involving themselves into a loss, because of this we are not reducing the subsidised price—will this Government explain this fact before the Centre and see to it that we get the same subsidy? If we do not get it, may I know whether the State Government have got the answer from the Central Government as to the reasons for which we are not getting the extra subsidy?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் எந்தவிதமான சப்சிடியும் கொடுக்கவில்லை. நம்முடைய தமிழக சர்க்கார்தான் இப்படிப்பட்ட சப்சிடியை வழங்கி வருகிறது. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

Text Books Committee for Schools

* 298 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any Committee has been set up to prescribe text books for students for various classes in High Schools and Colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசு பாட நூல்கள் வெளியிட்டிராத பாடங்களைப் பொறுத்தவரை 1971-72-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் உள்ள எல்லா அரசு உயர் நிலைப்பள்ளிகளிலும் பயன்படுத்தற்குரிய பாட நூல்களைத்

தேர்ந்தெடுக்கப் பள்ளிக் கல்வி இயக்குநரின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது. கல்லூரிகளில் பயன்படுத்தற்குரிய பாட நூல்கள் எவை எவை என்பதை முடிவு செய்வது பல்கலைக் கழகங்களே ஆகும்.

திரு. எஸ். சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் பள்ளிகளில் அரசினால் வெளியிடப்படக்கூடிய பாடப் புத்தகங்கள் சரியாகக் கிடைக்கவில்லை. அதன்காரணமாகப் பள்ளிக் குழந்தைகள் கல்வி கற்பதற்காக மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் முடிவு எடுத்து, பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக பாட புத்தகங்களை அச்சிடுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாகப் பாடப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு மே திங்களுக்குள் எல்லாப் பாட நூல்களையும் அச்சிட்டுக் கொண்டுவந்து முன்கூட்டியே எல்லா மையங்களுக்கும் அனுப்பப் பட்டு, மாணவர்கள் எளிதாகப் பெறுவதற்கு வழிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாடப்புத்தகக் குழு இனிமேலாவது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய புதுமைக்கவிதைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சீர்திருத்தக் கட்டுரைகளையும் பாடப் புத்தகத்தில் சேர்க்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும், உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. இந்தக் கேள்வி பாட நூல்களைப் பள்ளிகளில் வைப்பது பற்றி. பாட நூல்களில் என்ன என்ன சேர்ப்பது என்பது பாடநூல் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று. வரலாற்றுச் சிறப்பு பெற்றவர்கள் இம்மாதிரி தலைவர்களின் வரலாற்றுக் குறிப்புக்களையெல்லாம் பாடநூல்களில் சேர்க்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்களைச் சேர்ப்பதில் தடை ஒன்றும் இல்லை. அறிஞர் அண்ணாவைப்பற்றிய தனி நூல் நான்-டீடெயிலாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் நூல்கள் எழுதுகிறார்கள். அதை டெக்ஸ்ட் புக் கமிட்டி அப்ரூவ் செய்கிறார்கள். அப்படி நூல்கள் தேர்ந்தெடுக்கப்படு வதற்குத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிப்பாட நூல்கள் வெளியீடு

*299. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அடுத்த 1972–73-ம் கல்வி ஆண்டில் அரசு வெளியிடவிருக்கும், பள்ளிக்கூடப் புத்தகங்கள் பற்றி புத்தக வியாபாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டுவிட்டதா?